**செய்தி வெளியீடு** **நாள்: 5.8.2025**

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ஒட்டுமொத்தமாக 282 பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம், கூடுமான அளவிற்கு 80 சதவீத பணிகளாவது 2026 ஜனவரி மாதம் தை திங்களுக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (5.8.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகர் பேருந்து நிலையம், முல்லை நகர் பேருந்து நிலையம், ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதி, தண்டையார்பேட்டை பேருந்து நிலையம் மற்றும் தண்டையார்பேட்டையில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கத்தின் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** வழிகாட்டுதலின் பேரில் உருவான திட்டம் - வடசென்னைப் வளர்ச்சி திட்டப்பகுதி ஆய்வின் விவரங்கள்:

மாண்புமிகு, எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர், **தமிழக முதல்வர்** அவர்களது சிந்தனையில் உதித்த திட்டத்தின் வளர்ச்சி பணிகள் குறித்து, அவர்களது வழிகாட்டுதலின் படி எங்கள் துறையினுடைய செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களும் எங்கள் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் திரு.பிரகாஷ்,இ.ஆ.ப., அவர்களும், பெருநகர மாநகராட்சியினுடைய ஆணையாளர் திரு.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களும், வடசென்னை வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ஆர்.டி.சி திரு.ரவி தேஜா, இ.ஆ.ப., அவர்களும் தொடர்ந்து இந்த பணிகளை ஆய்வினை மேற்கொண்டு வருகின்றோம்.

இன்று, பெரம்பூர் மற்றும் ஆர். கே. நகர் பகுதிகளில் உள்ள எம்டிசி பேருந்து நிலையங்களின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டோம். பெரம்பூர் பகுதியில் முல்லை நகர், உதயசூரியன் பகுதியில் கட்டப்படுகின்ற பேருந்து நிலையம் மற்றும் ஆர். கே. நகர் பகுதியில் புதிய பேருந்து நிலையம், விளையாட்டு அரங்கம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டன.

Verified RealEstate ™

இதில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் 200 கோடி ரூபாய் செலவில் 11 புதிய பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் 2025 நவம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பணிகள் **மாண்புமிகு முதல்வர்** மற்றும் **மாண்புமிகு துணை முதல்வர்** அவர்களால் நேரில் திறந்து வைக்கப்படும். இன்று மேற்கொண்ட ஆய்வில், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர், ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜே.எபினேசர், மண்டல குழு தலைவர் நேதாஜி யூ.கணேசன், மாநகராட்சி நகரமைப்பு குழுத்தலைவர் திரு.இளைய அருணா மற்றும் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சிறந்த வசதிகளை உருவாக்கும் நோக்கத்தில், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நான்கு திட்ட பணிகள் 2025 நவம்பர் மாதத்திற்குள் நிறைவு பெறும் என நம்பிக்கை தெரிவிக்கின்றோம். குறிப்பாக, விளையாட்டு அரங்கப் பணிகள் 15% முன்னேற்றத்தில் உள்ளன. ஆர்.கே.நகர் பேருந்து நிலையம் 15% பின்தங்கிய நிலையில் உள்ளது. அதனை விரைவுபடுத்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், நேற்றைய தினம் ஆர்.கே.நகர் பகுதியில் 3 முதல்வர் படைப்பகங்கள், இராயபுரம் மற்றும் பெரம்பூரில் தலா 1 முதல்வர் படைப்பகங்கள் என மொத்தம் 5 முதல்வர் படைப்பகங்களின் துவக்க விழா நடைபெற்றது. இவையும் 2025 நவம்பர் மாதத்திற்குள் திறக்கப்படும்.

மொத்தம் 282 திட்டப் பணிகளில் 80% வேலைகள் 2026 ஜனவரி மாதத்திற்குள் முடிவடையும் வகையில் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மக்கள் பயன்பாட்டிற்காகவும், போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காகவும் கள ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**மற்ற பகுதிகளுக்கான வளர்ச்சி திட்டங்கள்:**

மாதவரத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு பேருந்து சேவை: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, மாண்புமிகு முதல்வர் உத்தரவிட்டுள்ளார். கூத்தம்பாக்கம் பேருந்து நிலையம்: இவ்வாண்டு இறுதிக்குள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும். செங்கல்பட்டு, ஆவடி பேருந்து நிலையங்கள்: இவையும் இவ்வாண்டு இறுதிக்குள் திறக்கப்படவுள்ளன. மாதவரத்தில் மெட்ரோ பணி முடிந்தவுடன் புதிய பேருந்து நிலையம்: வடசென்னைக்கு புதிய வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் அமையும்.

**சட்ட வழக்கு நிலவரம்:**

வழக்கு துரிதப்படுத்த முயற்சி நடைபெற்று வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எபினேசர் மற்றும் திருவொற்றியூர் எம்எல்ஏ திரு.சங்கர் ஆகியோர் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றனர். செயலாளர் திருமதி.கார்லா உஷா, இ.ஆ.ப., மற்றும் உறுப்பினர் செயலர் திரு.பிரகாஷ், இ.ஆ.ப., ஆகியோரும் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

Verified RealEstate™

மாநில மக்கள் நலன் கருதி, **மாண்புமிகு முதல்வர் அவர்களின்** தொலைநோக்கு பார்வையின் கீழ் வடசென்னை மற்றும் பிற பகுதிகளில் நடை பெறும் இந்த திட்டங்கள், வாழ்க்கை தரத்தை உயர்த்தும் முக்கிய நடவடிக்கைகளாக அமையும். எங்கள் துறை அதிகாரிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர், ஆர். கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜே.எபினேசர், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., நகரமைப்பு குழுத்தலைவர் திரு.இளைய அருணா, மண்டலக் குழுத்தலைவர் திரு.நேதாஜி யூ.கணேசன், மாநகர் போக்குவரத்துக் கழக இணை மேலாண்மை இயக்குநர் திரு.ராகவன், பொது மேலாளர்கள் திரு.நெடுஞ்செழியன், திரு.ராஜசேகர், மாமன்ற உறுப்பினர்கள் திரு.மலைச்சாமி, திரு.ஜீவன், திருமதி.ஷர்மிளா காந்தி, திருமதி.குமாரி நாகராஜன், திருமதி.பவித்ரா, மாநகராட்சி, மின்சாரத்துறை மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™